

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 14.07.2026


# மனித உயிர் வேட்டைக்காரன்!

**41** பேர் பச்சைப் படுகொலைக்கு காரணமாக இருந்து விட்டு எப்படித்தான் வெட்கமில்லாமல், கூச்சமில்லாமல் இன்னமும் பாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறார் விஜய் எனத் தெரியவில்லை. விஜய் எவ்வளவு குரூரமானவர் என்பதற்கு உதாரணம்தான் அவரது கரூர் பேச்சு.

“ஓடு... ஓடு.. வர்றான் பாரு வேட்டைக்காரன்” என்று பாடி ஆடியதற்கு பதிலாக **“வர்றான் பாரு மனித உயிர் வேட்டைக்காரன்”** என்று பாடி ஆடி இருக்கலாம். **“வர்றான் பாரு நரபலி வேட்டைக்காரன்”** என்று பாடி ஆடி இருக்கலாம். ஏனென்றால் கரூரில் நடந்தது அதுதான்.

அவரது விளம்பர வெறிக்காகவும், புகழ் அரிப்புக்காகவும், தான் இத்தனை உயிர்கள் பலியானார்கள். சூட்டிங் எடுப்பதற்காக, காட்சியில் தத்ரூபத்தை உருவாக்குவதற்காகத்தான் மக்களைக் காத்திருக்க வைத்து அந்த வெறித்தனமான காட்சியை எடுக்க நினைத்தார்கள். ஃபயர் விடும் காட்சியை எடுப்பதற்காகத்தான் 41 உயிர்கள் பலியானது.

ஒரு வீட்டில் ஒரு துக்கம் நடந்து விட்டால், அதுவும் மிகமிக சோகமான துக்கமாக அமைந்துவிட்டால் அதனை தன் வீட்டுச் சோகங்களைப் போல நெஞ்சில் ஈரமுள்ள அனைவரும் பல ஆண்டுகள் நடந்து கொள்வார்கள். இதெல்லாம் நெஞ்சில் ஈரம் உள்ளவர்களுக்குத்தான் பொருந்தும். நெஞ்சில் வஞ்சகத்துடன் வாழும் விஜய் போன்றவர்களுக்கு பொருந்தாது. ரசிகனின் வியர்வையால் ஹீரோவாகி, ரசிகனின் ரத்தத்தால் கட்சி நடத்த நினைக்கும் வஞ்சக விஜய்யிடம் இது போன்ற குரூரமான, கொடூரமான, வன்மமான பேச்சுகள்தான் வாயில் இருந்து வரும்.

**‘எனக்கு வாயில வந்திறப் போகுது’** என்று திருச்சியில் நர மொழி உதிர்த்த விஜய், **‘ஒரு ..... ம் கிடையாது’** என்று கரூரில் அது என்ன வார்த்தை என்பதைச் சொல்லி இருக்கிறார். அடுத்து சென்னையில் பேசும் போது **‘சென்னையின் புகழ் மிக்க சொல்லை’** உதிர்ப்பார். அதையும் எழுதிக் கொடுப்பார்கள். டயலாக் விடுவார். தான் இப்போது விசிலடிச்சான் குஞ்சுகளின் தலைவன் அல்ல, தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பதை அவர் முதலில் உணர வேண்டும். எவ்வளவு பெரிய பெரிய தலைவர்கள் இருந்த நாற்காலி, எத்தகைய தலைக்கனம் கொண்ட மனிதன் கையில் சிக்கி இருக்கிறது என்பதுதான் வேதனைக்குரியது.

**கரூரில் மனித உயிர்கள் செத்து விழுந்த போது தலைதெறிக்க கரூரை விட்டு திருச்சிக்கு ‘ஓடு ஓடு’ என ஓடிவந்தது விஜய். மரணங்களின் எண்ணிக்கை 30 ஐ தாண்டிவிட்டது என்று சொல்லப்பட்ட பிறகும் திருச்சியை விட்டு ‘ஓடு ஓடு’ என்று ஓடி வந்தது விஜய். 41 பேர் இறந்து போனார்கள் என்று சொன்ன பிறகும் சென்னை வீட்டுக்குள் பதுங்கியது யார் விஜய்.**

புஸ்சி ஆனந்த் ஓடிவிட்டார். ஆதவ் அர்ஜுனா ஓடி விட்டார். நிர்மல் குமார் ஓடி விட்டார். த.வெ.க.வின் கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் ஓடிவிட்டார். சி.. பி.ஐ.க்கு வழக்கு மாறாமல் இருந்திருந்தால் இவர்கள் அனைவரும் இன்று வரை தலைமறைவாகவே இருந்திருப்பார்கள்.

இப்படி ஒரு சோகம் தனது ஊருக்குள் நடந்துவிட்டது என்று அறிந்ததும் அடுத்த நிமிடமே மருத்துவமனைக்கு வந்தவர் செந்தில் பாலாஜி. அவரை உடனடியாகச் செல்ல உத்தரவிட்டவர் மனிதாபிமான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். எந்தக் கட்சிக் கூட்டத்தில் நடந்தது என்பதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் நடவடிக்கை எடுக்கச் சொன்னார் அன்றைய முதலமைச்சர் அவர்கள். அரசு இயந்திரம் உரிய வகையில் செயல்படாமல் இருந்தால் இன்னும் பல உயிர்கள் போயிருக்கும். நூற்றுக்கும் மேற்பட்டவர்களை மருத்துவ மனையில் சேர்த்து காப்பாற்றியவர் செந்தில் பாலாஜி. மனித உயிர்களைக் காப்பாற்றியவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். ஆனால் நரபலி வேட்டையை நடத்திக் கொண்டிருப்பவர் கையில் இன்றைய அதிகாரம் சிக்கி இருக்கிறது.

அந்த சூழலிலும் விஜய்யை குறைசொல்லவில்லை அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். **‘எந்த அரசியல் கட்சித் தலைவரும் தனது தொண்டர்கள் பலியாவதை விரும்ப மாட்டார்கள்’** என்று விஜய்க்கு ஆதரவாக தான் அன்றைய முதலமைச்சர் பேசினார். அந்தப் பெருந்தன்மை மனிதரைத்தான் விஜய் இன்று திட்டித் தீர்க்கிறார்.

**நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்**
**பண்பறிந் தாற்றாக் கடை** என்கிறார் திருவள்ளுவர். ஒருவருக்கு நன்மை செய்யும் போது அவரின் குணநலன்களை முழுமையாகப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செய்யாவிட்டால், அந்த நன்மையும் தீமையாகவே முடிந்துவிடும் என்று அன்றே சொல்லி இருக்கிறார் வள்ளுவர். விஜய் போன்றவர்களின் குணம் அறிந்து செயல்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் காலம் நமக்குக் கற்றுத்தரும் பாடம் ஆகும்.

எஃப்.ஐ.ஆரில் விஜய் பெயரைச் சேர்த்திருந்தால், ‘ஜனநாயகன்’ படத்துக்கு டான்ஸ் ஆடி இருக்க முடியாது. **இவர் சோகமாக இருந்தாராம், வலியோடு இருந்தாராம். அந்த நேரத்தில் இவர் மீது பழி போட்டு விட்டார்களாம். இவரது சோகத்தைத் தான் மலேசியாவில் பார்த்தோமே. 41 பேர் மரணத்துக்குத் தான் சோகமாக மலேசியாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் டான்ஸ் போட்டு கொண்டாடினாரே!**

படத்தில்தான் சோகக் காட்சி முடிந்ததும், சம்பந்தமில்லாமல் குத்துப்பாட்டு வரும். அப்படிக் கொண்டாடியவர் விஜய். அவர் 10 மாதம் கழித்து சோகத்தோடு கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு சோகமான முகத்தை வைத்துக் கொண்டு குரூரமான பேச்சை பேசுகிறார்.

சி.பி.ஐ.க்கு மட்டும் வழக்கு மாறாமல் இருந்திருந்தால் விஜய், தலைமறைவாகத்தான் ஓடிக் கொண்டு இருந்திருப்பார். ஓடு ஓடு ஓடு என ஓடிக் கொண்டு இருந்திருப்பார்.

கரூரில் 41 பேர் பலியானதை, **‘மனிதப் பேரிடர்’** என்று சொன்னது சென்னை உயர்நீதிமன்றம். **‘இதற்கு விஜய்யும், விஜய் கட்சி நிர்வாகிகளும் தான் பொறுப்பேற்க வேண்டும்’** என்றும் சொன்னது சென்னை உயர்நீதிமன்றம். இந்த பலிக்கு யார் காரணம் என்பதை சி.பி.ஐ. விசாரிக்க உத்தரவிட்டது உச்சநீதிமன்றம். ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியின் கண்காணிப்பில் இது நடக்க வேண்டும் என்று சொன்னது உச்சநீதிமன்றம்.

அந்த பிரச்சினை பற்றி பொதுவெளியில் பேசுவதே நீதிமன்ற அவமதிப்பு ஆகும். விசாரணையைப் பாதிக்கும் செயல் ஆகும். பாதிக்கப்பட்டோர் குடும்பத்துக்கு அழுத்தம் கொடுக்கும் செயல்களைச் செய்தது தவறு ஆகும். பிரச்சினையில் தொடர்புடைய 19 காவல் துறை அதிகாரிகள், அலுவலர்களை பல்வேறு ஊர்களுக்கு மொத்தமாக தூக்கியடித்ததும் தவறு ஆகும். அதாவது **தன்னைக் காப்பாற்றிக் கொள்ள துடிக்கிறார் விஜய்.**

தனது தவறுகளை மறைக்க செந்தில் பாலாஜி ஓடுகிறார், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிங்கப்பூர் போய்விட்டார் என்று கீழ்த்தரமான பேச்சுகளைப் பேசி திசை திருப்புகிறார். செந்தில் பாலாஜி எங்கும் ஓடவில்லை. உள்ளூரில்தான் இருக்கிறார். மருத்துவச் சிகிச்சைக்காகத் தான் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சென்றுள்ளாரே தவிர வேறல்ல. இது போன்ற திசை திருப்பல்கள், அரைமணி நேர பிரேக்கிங் மட்டுமே!

**விஜய் ஆட்சி நடத்தவில்லை. ஆட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார். அது அருவெறுப்பாக இருக்கிறது என்பதை அவருக்கு வாக்களித்தவர்களே உணரத் தொடங்கி விட்டார்கள்.**

●●

## கொரோனா வார்டில் அன்று ஆய்வு செய்த

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்தான் ரியல் மாஸ் ஹீரோ!

## இயக்குநர் சுசிகணேசன் பேச்சு வீடியோ வைரல்!

**சென்னை, ஜுலை 14 -**

**கொரோனா காலகட்டத்தில் நேரில் சென்று வார்டில் ஆய்வு செய்த முன்னாள் முதலமைச்சர் - தி,மு,க, தலைவர் மு.க.ஸ்டாலின் தான் ரியல் ஹீரோ என்று இயக்குநர் சுசி கணேசன் பேசிய வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது**

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் குறித்து, திரைப்பட இயக்குநர் சுசி கணேசன் பேசிய வீடியோ ஒன்று தற்போது வைரலாகி வருகிறது.



2021 ஆம் ஆண்டு மே 30ம் தேதி கொரோனா காலகட்டத்தில் கோவை அரசு மருத்துவமனையில் முன்னாள் முதலமைச்சர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டதை குறிப்பிட்டு பேசிய சுசி கணேசன் ரீல் ஹீரோவுக்கும் ரியல் ஹீரோவுக்குமான வித்தியாசம் இது தான் என குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா பாதித்த ஒருவரை உறவினர்களே சந்திக்க அஞ்சிய நிலையில் முதல்வராக இருந்த தி,மு,க, தலைவர் நேரடியாக சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலாக நின்றார் என்றும் அவர் நெகிழ்ச்சியுடன் பேசிய வீடியோ ஒன்று தற்போது வைரலாக பரவிவருகிறது .

## ஓடுவது, ஒளிவது, பதுங்குவது எல்லாம்...

# தி.மு.க.வினரின் வரலாற்றிலேயே கிடையாது!

## சிகிச்சை முடிந்து சிங்கப்பூரில் இருந்து திரும்பிய முன்னாள் அமைச்சர் எ,வ,வேலு - சென்னை விமான நிலையத்தில் முதல்வர் விஜய்க்கு பதிலடி!

**சென்னை, ஜுலை 14 -**

**முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, சிங்கப்பூரில் சிகிச்சை முடிந்து, நேற்று முன்தினம் சென்னை திரும்பினார்.**

**சென்னை விமான நிலையத்தில் பேட்டியளித்த அவர், “ஓடுவது, ஒளிவது, பதுங்குவது எல்லாம் தி.மு.க.வினரின் வரலாற்றிலேயே கிடையாது!” என, முதல்வர் விஜய்க்கு ஆணித்தரமான பதிலடி கொடுத்தார்.**

**முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், தமது பேட்டியின் போது குறிப்பிட்டதாவது:-**

இன்றைக்கு நான் மருத்துவப் பரிசோதனைக்காக சிங்கப்பூர் செல்வதற்காக விமான டிக்கெட் எடுத்திருக்கிறேன். இப்பொழுது நீங்கள் சோதனைக்கு வந்திருக்கிறீர்கள். இன்றைக்கு நீங்கள் சோதனையை முடித்தவுடன், நாளைக்கு சிங்கப்பூர் செல்வதற்காக டிக்கெட்டை மாற்ற வேண்டும் என்று சோதனை செய்தவர்களிடம் சொன்னேன். அன்றைக்கு இரவே அவர்கள் சோதனையை முடித்து விட்டுப் போனவுடன், இதே பத்திரிகை நண்பர்களைப் பார்த்து, சோதனை நடைபெற்ற விஷயம் குறித்து நான் பேசினேன்.

25-ஆம் தேதி சிங்கப்பூருக்குச் செல்வதற்காக வாங்கியிருந்த டிக்கெட்டை, 26-ஆம் தேதி காலையில், அதே இண்டிகோ விமானத்தில், காலையில் செல்வதற்காக 26-ஆம் தேதிக்கு மாற்றினேன்.

அதே விமானத்தில், நான் 26-ஆம் தேதி, இங்கிருந்து சிங்கப்பூருக்கு மருத்துவப் பரிசோதனைக்காகச் சென்றேன். அங்கே உள்ள மருத்துவமனைக்கு நான் சென்றவுடன், என்னுடைய மருத்துவ பரிசோதனைகள் எல்லாம் தொடங்கப்பட்டன.

எனக்கு உடலில் பல பிரச்சினைகள் உள்ளன. அலர்ஜி, நரம்புப் பிரச்சினை, இதயப் பிரச்சினை என்பதுதான் அந்தப் பிரச்சினைகள். இந்த மூன்று பிரச்சினைக்காகத்தான் அங்கே சென்று மருத்துவம் செய்யவேண்டும் என்று முடிவெடுத்து, நான் அங்கே போனேன்.

### அலர்ஜி பிரச்சினை

அலர்ஜி பிரச்சினை ஏன் வருகிறது? நாம் உண்ணுகிற உணவுப் பொருள்கள் எல்லாம் எது எது என் உடலுக்கு ஒத்துக் கொள்ளும். ஏன் அதனால் அலர்ஜி வருகிறது என்று கண்டுபிடிப்பதற்காக ஒரு முறை ஊசி போட்டால், மூன்று நாள்கள் அப்சர்வ் செய்யவேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னார்கள். மருத்துவர்கள் சொன்னபடியே, மூன்று முறை நான் ஊசி போட்டுக் கொண்டேன். அதற்கே 9 நாள்கள் ஆயிற்று.

இரண்டாவது, 29.6.2026 அன்றைய நாள் கார்டியாலஜிஸ்ட் மருத்துவரையும், நரம்புப் பிரச்சினைகளுக்காக நரம்பியல் டாக்டரான லீக்கிம் பென் என்ற மருத்துவரிடம், மருத்துவ ஆலோசனை செய்து, அன்றைய தினம், மருத்துவப் பரிசோதனைகளைச் செய்துகொண்டேன்.

அடுத்ததாக, 30.6.2026 அன்று, என்னுடைய வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்காக, பீட்டர் யங் கெங் என்பவரை அன்றைக்குச் சந்தித்து, மருத்துவப் பரிசோதனையை மேற்கொண்டேன்.

### மெடிக்கல் சம்மரி

அன்றைய தினமே, அலர்ஜி (ஒவ்வாமை) டாக்டர் சென் இங் குவாங் என்ற மருத்துவரைப் பார்த்தேன். 9.7.2026-ஆம் தேதி வரையில் அவருடைய மருத்துவம் தொடர்ந்து இருந்தது. அதே நேரத்தில், 3.6.2026-ஆம் தேதி இதய மருத்துவர் டாக்டர் ஜெயராமன் லிங்கம நாயக்கர். அவருடைய மேற்பார்வையில் தான், அவர்தான் சீப் டாக்டர், அவருடைய பரிந்துரையின் பேரில்தான் ஒவ்வொரு டாக்டரையும் நான் பார்த்து, மருத்துவப் பரிசோதனைகளை எடுத்துக் கொண்டேன். அதுக்குரிய எல்லா டாக்டருடைய மெடிக்கல் சம்மரி என்னிடம் இருக்கிறது.



ஒவ்வொரு டாக்டரும் என்ன என்ன ஆலோசனை கொடுத்திருக்கிறார்கள்; என்னென்ன மருந்துகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்கிற முழு விவரங்களும் என்னிடத்தில் இருக்கிறது.

மூன்றாவதாக, அவர்கள் கொடுத்த மொத்தமும் இந்த கேஸ் ஷீட் தான். இதில் எல்லா விவரங்களும் இருக்கிறது. எல்லா டாக்டர்களும் கொடுத்திருக்கிறார்கள். 2026 ஆம் ஆண்டினுடைய சம்மரி முழுவதும், நான் எந்தெந்த டாக்டர்களைப் பார்த்தேன்; ஈசிஜில் இருந்து ஹார்ட் சம்பந்தப்பட்ட மருத்துவப் பரிசோதனை செய்த சம்மரியும் இருக்கிறது.

இனிமேல், நான் என்ன உணவு சாப்பிட வேண்டும்? என்ன மாத்திரை சாப்பிட வேண்டும் என்கிற முழுத் தகவல்களும் இந்த சம்மரியில் இருக்கிறது. 2026 ஆம் ஆண்டுக்கான மருத்துவப் பரிசோதனை செய்துகொண்ட டாக்குமெண்ட் எல்லாம் இருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையில் மூன்றாம் தேதி வரச் சொல்லி, ஒரு சம்மன் எங்கள் வீட்டில் ஒட்டியிருப்பதாக எனக்குத் தகவல் சொன்னார்கள். நான் உடனே, அந்த சம்மனை நகலெடுத்து ஃபேக்ஸ்சில் அனுப்பச் சொன்னேன். அப்படி அனுப்பியதும், அந்த சம்மனை நான் படித்துப் பார்த்தேன்.

நீங்கள் மூன்றாம் தேதி வர வேண்டும் என்று அந்த சம்மனில் இருந்தது.

நான் உடனே அந்த சம்மனுக்கு மரியாதை கொடுத்து, அங்கேயே உடனே ஒரு கடிதம் எழுதி இருக்கிறேன்.

3 ஆம் தேதி வரச் சொன்னதற்கான பதிலை நான் எழுதியிருந்தேன். என்ன எழுதியிருந்தேன் என்றால், நான் மருத்துவப் பரிசோதனையை முடித்துக் கொண்டுவருவதற்கு 10 நாள்கள் ஆகும் என்று கடிதம் கொடுத்தேன். அப்படி அந்தக் கடிதம் கொடுத்தும், உடனே ஒன்பதாம் தேதி வாருங்கள் என்று சொல்லி ஒரு சம்மன் கொடுக்கிறார்கள். மறுபடியும் அந்த சம்மனுக்குத்தான் நான் கடிதம் எழுதினேன்.

### சம்மனுக்கு அளித்த கடிதம்!

**அந்தக் கடிதத்தைப் படிக்கிறேன், கேளுங்கள்:**

**வணக்கம்!**

**“என் மீது தொடுக்கப்பட்ட FIR வழக்கு சம்பந்தமாக, 9.7.2026 அன்று மீண்டும் விசாரணைக்கு வரச் சொல்லி நோட்டீஸ் அனுப்பியுள்ளீர்கள். 3.7.2026 அன்று எனது வழக்குரைஞர் மூலமாக, நான் சிங்கப்பூரில் என் உடல் சம்பந்தமாக மருத்துவச் சோதனையில் ஈடுபட்டுள்ளேன். எனக்கு 10 தினங்கள் அவகாசம் தாருங்கள் என, கடிதம் கொடுத்திருந்தேன். தாங்கள், வழக்குரைஞரிடம் வாய்மொழியாக 15 ஆம் தேதிக்கு மேல் நோட்டீஸ் அனுப்புகிறேன் என்று கூறிவிட்டு, 5 தினங்களிலே வரச் சொல்லுகிறீர்கள். 9.7.2026 அன்று மீண்டும் என் இல்லத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும், 12.7.2026 ஆம் தேதிக்குள் மருத்துவப் பரிசோதனை முடிந்துவிடும். எனவே, தாங்கள் 12.7.2026 ஆம் தேதிக்கு மேல் எந்த தேதியில் அழைத்தாலும், விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கிறேன் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தேன்.**

**அந்தக் கடிதத்தை வழக்குரைஞர் மூலம் அளித்திருந்தேன். இதில், எங்கே ஓடுறாங்க, எங்கே ஒளியுறாங்க, எங்கே பதுங்குகிறாங்க?**




**மருத்துவப் பரிசோதனைக்கு வழக்கமாக, எப்பொழுதும் போகிற மாதிரிதான் போனேன். வழக்குரைஞர் மூலமாகக் கடிதங்களையும் கொடுக்கிறோம். முழு ஒத்துழைப்புக் கொடுக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறோம்.**

**இவ்வளவுக்குப் பின்னாலும், ஓடுறாங்க, ஒளியுறாங்க, பதுங்குறாங்க என்பது அர்த்தமில்லாத கருத்துடைய வார்த்தைகள்தான். அதனால், என்னைப் பொறுத்த அளவுக்கு, நான் 2014-ஆம் ஆண்டிலிருந்து தொடர் மருத்துவச் சிகிச்சைகளை மேற்கொண்டிருக்கிறேன். அதற்கு முன் 2023-ஆம் ஆண்டு சிங்கப்பூருக்குச் சென்றேன். அதன் தொடர்ச்சியாக, மருத்துவப் பரிசோதனைக்காக 2026-ஆம் ஆண்டு சிங்கப்பூருக்குச் சென்றேனேயொழிய, சுற்றுலாப் பயணியாகவோ அல்லது வேறு எதற்காக அஞ்சியோ நான் அங்கே போகவில்லை.**

**இவ்வளவுதான், இன்றைக்கு நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டிய விஷயம்.**

### முழுமையான விளக்கம்!

**ஏனென்றால், ஒரு வார காலம், அவரவர்களுக்கு என்னென்ன கற்பனை தோன்றுமோ, அப்படி கற்பனையில் பல்வேறு வகையில், நமக்குப் பிடித்த நண்பர்கள் எல்லாம், சமூக வலைத்தளப் பதிவு என்ற பெயரில், அவர்களுடைய கற்பனையை எல்லாம் அவிழ்த்து விட்டிருக்கிறார்கள். அத்தனை நண்பர்களுக்கும் நான், இன்று உங்களை எல்லாம் சந்திப்பதன் மூலமாக ஒரு முழுமையான விளக்கத்தைத் தந்திருக்கிறேன். இது போதுமானது என்று நான் கருதுகின்றேன்.**

**செய்தியாளர்:** தொடர்ந்து நீங்கள் குறிவைக்கப்படுகிறீர்கள் என்று நினைக்கிறீர்களா? ஏற்கெனவே உங்கள் வீட்டில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் சோதனை செய்கிறார்கள். முதலமைச்சரும், இரண்டு முன்னாள் அமைச்சர்களைத்தான் தான் குறிப்பிட்டுப் பேசுகிறார். கரூரில், செந்தில் பாலாஜியைக் குறிப்பிட்டுப் பேசுகிறார். இன்னொன்னு, உங்களைக் குறிப்பிட்டுப் பேசுகிறார். தொடர்ச்சியாக உங்களை டார்கெட் செய்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா?

**எ.வ.வேலு:** பொதுவாக, என்னைப் பொறுத்தளவுக்கு டார்கெட் செய்யவேண்டிய அவசியம் இல்லை. நான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொறடாவாக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்கள் என்னை நியமித்திருக்கிறார்கள். அதை, இந்த அரசாங்கம் குறிப்பாக பேரவைத் தலைவர் அவர்கள் அதை அங்கீகரித்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட எதுவாக இருந்தாலும், பேரவைத் தலைவரைப் பார்ப்பதோ அல்லது அரசு சம்பந்தப்பட்ட எதையாவது கேள்வி கேட்க வேண்டும் என்று சொன்னால், அந்தக் கொறடாவுக்கு முழு சுதந்திரம் உண்டு. எனவே, அந்த மூன்று நாள்கள் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில்கூட, அதிகமானவற்றை நான்தான் கேட்டிருப்பேன். அது என்னுடைய கடமை. என்னுடைய கடமையை நான் சட்டமன்றத்தில செய்துதானே ஆக வேண்டும்.

அதிலும் நான் ஒரு மூத்த உறுப்பினர். அதனால், நான் கேட்க வேண்டிய கேள்வியைதான் கேட்க வேண்டும். அது பிடிக்குதா, பிடிக்க வில்லையா? நான் சொல்கிற விளக்கம் போதுமா, போதாதா? இல்லை, நான் பேசவேக் கூடாது என்று அவர்கள் நினைக்கிறார்களா? என்பது போக போகத் தான் தெரியும்.

**செய்தியாளர்:** 15-ஆம் தேதி விசாரணைக்கு ஆஜராவீர்களா?

**எ.வ.வேலு:** கட்டாயம் ஆஜராகுவேன். நானே சொல்லி இருக்கிறேனே, நான் 12-ஆம் தேதிக்கு மேல், எந்தத் தேதி கொடுத்தாலும் நான் ஒத்துழைப்புத் தருவேன் என்று நான் சொன்னேன். அதனால் நான் முழு ஒத்தழைப்பைத் தருவேன். அதில் ஒன்னும் மாற்றம் இல்லை.

இரண்டாவது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்ற காரணத்தினால், அது சம்பந்தமாக நான் பேச முடியாது. நீதி என் பக்கத்தில் இருக்குது. நான் கட்டாயம் நீதிக்குத் தலை வணங்குவேன். நீதிமன்றம் எனக்கு நல்ல தீர்ப்பு வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில், நான் எந்தவித குற்றமும் நான் புரிந்தவனில்லை. குற்றம் செய்ய வேண்டிய அவசியமும் எனக்கு கிடையாது. அதனால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறேன். நீதி மீது எனக்கு நம்பிக்கை உண்டு.

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கொறடா எ.வ.வேலு செய்தியாளர்களிடம் கூறினார்.